1974 மார்ச் 27]

வெள்ளி விழா கிராமம்

*636 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஒன்றியத்தில் வெள்ளி விழா கிராமமாக எந்த கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது?

(இ) இதுவரையிலும் அங்கே என்னென்ன வேலைகள் நடைபெற்று இருக்கின்றன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இராமநாதபுரம் மாவட்டம் மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தீத்தாம்பேட்டை கிராமம் வெள்ளிவிழா சிற்றூராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

(இ) நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள், நிறைவேற்றப்பட்ட பணிகள், ஆகிய விவரங்களடங்கிய அறிக்கை@ ஒன்று பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. நா. வீராசாமி: வெள்ளி விழாவை முன்னிட்டு இவ்வளவு சிறப்பாக, ரோடு போடுதல், குடிதண்ணீர் வசதி, அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல் ஆகிய பணிகளுக்காக ஒரே ஒரு கிராமத்திற்கு 1,28,660 ரூபாய் செலவழிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 25,000 ரெவின்யூ வில்லேஜ்கள் இருக்கின்றன. இதே போன்று எல்லாக் கிராமங்களுக்கும் செய்து கொடுக்க வேண்டுமென்றால் 31,250 கோடி ரூபாய் ஆகும். இதைக் கனவில் கூடக் காண முடியாது. ஒரு ஆண்டுக்கு சில கிராமங்களை எடுப்பது என்று வைத்துக் கொண்டால்கூட 100, 150 ஆண்டு காலமாகும். இந்தச் சிறப்பான திட்டத்தை முடிந்த அளவுக்கு மத்திய அரசின் உதவியைப் பெற்றாவது நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: யோசனை நன்றாக இருக்கிறது. நிறைவேற்ற இப்போது இயலாது.

@ 655–657-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. நா. காசிராமன்: 1,28,000 ரூபாய்க்கு மேல் செலவு செய்து நல்ல பணிகளை அனுபவிக்கக்கூடிய நிலைமையில் வெள்ளி விழா சீரூராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தக் கிராமம் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டது? அதேமாதிரி மற்றக் கிராமங்களுக்கும் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இந்தியாவின் 25-வது சுதந்திர வெள்ளி விழா ஆண்டையொட்டி ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு ஊராட்சியைத் தேர்ந்தெடுத்து மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து நடத்தும் திட்டம் இந்தத் திட்டம். இந்தத் திட்டத்திற்கான கிராமங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அவர்கள் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு ஊராட்சியைத் தேர்ந்தெடுத்து அனுப்பி இருக்கிறார்கள் அந்த அடிப்படையில் இது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

Applied Nutrition Programme

* 637 *Q* —THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Applied Nutrition Programme is being implemented in Kanyakumari district; and

(*b*) if so, the details of the Blocks, where it is being implemented?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) தக்கலை பஞ்சாயத்து ஒன்றியத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. என். டென்னிஸ்: கிள்ளியூர் வளர்ச்சி வட்டம் பிற்பட்ட வளர்ச்சி வட்டம். பொருளாதார நிலையில் பின்தங்கிய ஏழை மக்கள் இருக்கிறார்கள். அங்கு நியூட்ரிஷன் ப்ரோகிராம் திட்டம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: 1972–73-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் தக்கலை உட்பட ஆறு வளர்ச்சி வட்டாரங்களில் திட்டத்தை செயல்படுத்துமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.